**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.741/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | முத்துவீரன், வயது 50 |
| Father Name/Husband Name | : | சேர்வாரன் |
| Village | : | பழைய அப்பனேரி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of August 2025.

**(Accused absent. 355 BNSS petiition filed and allowed.).**

<u>முதல் விசாரணை</u>

1 நான் தற்போது பழையஅப்பனேரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை பார்த்தாலும் எனக்கு தெரியாது. கடந்த 8 மாதங்களுக்கு முன்பு புதுகிராமத்திற்கு வேலைக்கு சென்று விட்டு மூக்கையா என்பவரும், நானும் என்னுடைய இருச்சக்கர வாகனத்தில் நான் ஓட்ட, மூக்கையா பின்னால் அமர்ந்து கிழக்கிலிருந்து மேற்காக வந்து கொண்டிருந்தோம். மாலை 06.30 மணியளவில் மில் பின் கேட் அருகே வளைவில் திரும்பி போய் கொண்டிருக்கும்போது பின்னால் வந்த திருமுருகன் மினிபஸ் எங்கள் வண்டியின் மீது மோதி விட்டது. அதில் எனக்கு இடதுப்பக்க காலில் காயம் ஏற்பட்டது.

2 என்னுடன் வந்த மூக்கையாவிற்கு வலதுபக்க காலில் அடிபட்டது. திருமுருகன் வண்டியை யார் ஓட்டி வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று சேர்ந்தோம். சிகிச்சையில் இருந்தபோது வந்த போலீசாரிடம் நடந்தவற்றிற்கு நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் கைரேகை செய்தேன். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3 என்னுடன் மூக்கையா என்பவர் வந்தார். நான் விபத்தில் மயக்கமாகி விட்டேன். அதனால் எந்த வாகனம் இடித்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் மயக்கமாக இருந்தால் நடந்ததாக சொல்லப்படும் விபத்து சம்பந்தமாக மூக்கையா புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எனக்கும், மூக்கையாவிற்கும் வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது. ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கு முறைப்படி ஓட்டி காட்டிதான் உரிமம் பெறவேண்டும் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சேர்ந்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாததால் எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும், நான் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.